RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s111

OPEN ACCESS

# பாரதியின் கவிதைகளில் கண்ணன் என்னும் மனிதன்

அ. தேன்மொழி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை-625402 தமிழ்நாடு, இந்தியா

# Kannan as a Human in Bharathi's Poems

A. Thenmozhi [a, *]

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts and Science for Women Paravai, Madurai–625402, Tamil Nadu, India

* Corresponding Author: athenmozhi2013@gmail.com

Received: 03-08-2021
Revised: 14-07-2022
Accepted: 26-07-2022
Published: 09-09-2022

## ABSTRACT

Kannan Songs (Kannan Paattu) are an expression of Bharathi's imagination. Bharathi's early education did not expose him to Saivam literature or the Kambaramayanam. During his stay in Puducherry, he became more involved in Andal Pasuram in Tiruvaimozhi due to the contact with Sri Aurobindo. It can be felt that there is an influence of the Azhwars' consciousness and language style. Bharathi is fascinated by seeing Kannan's many struggles, starting from his birth relocation and later in his early life, and Kannan's overcoming these struggles with a smile. His acceptance of good and condemnation of evil is a lively event. Towards this, the study of Bharathi's Kannan through the songs of Kannan, has been portrayed as a man of purpose and aims to kindle an interest among the readers to live like him.

**Keywords:** Kannan Songs, Bharathiar, Kannan, Kambaramayanam

## முன்னுரை

பாரதி பாண்டவர்களுக்கு உதவிய கண்ணனையே தனது தோழனாகக் கொள்கிறார். சுபத்திரை அர்சுனனைக் காதலிக்கிறாள். பலராமனுக்கு தன் தங்கையை அருச்சுனனுக்கு மணம்முடித்துக் கொடுக்க விருப்பமில்லை. இச்சூழலில் தன் தங்கை சுபத்திரையை அருச்சுனன் கடத்திச் செல்ல கண்ணன் உதவுகிறான். தர்மத்தின் வழிநின்று கௌரவர்களை வெற்றி கொள்கிறான் ஆகிய புராணச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இப்புராண நிகழ்ச்சிகளைத் தவிர அனைத்து செய்திகளும் இன்றைய நண்பர்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. உற்ற தோழன் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறான் கண்ணன்.

“உள்ளத்திலே கருவம் கொண்ட போதினில்
ஓங்கி அடித்திடுவான் - நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு
காறி உமிழ்ந்திடுவான்
சின்ன குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான் - நல்ல
வன்ன மகளிர் வசப்பட வேபல

மாயங்கள் சூழ்ந்திடுவான்"

கேட்ட பொருளை உடனே கொடுப்பான், நோய்க்கு மருந்தாவான், கேலி செய்தால் பொறுத்துக் கொள்வான், மனம் துன்பப்படும் வேளையில் துயர் தீர்ப்பான், குறிப்பறிந்து செயல்படுவான், கருவங்கொண்டால் ஓங்கி அடிப்பான், வஞ்சனை செய்தால் காறி உமிழ்வான். கோபத்தில் குலுங்கி சிரிக்க வைப்பான், ஆபத்தினை விலக்கிடுவான், சின்னக் குழந்தையைப் போல் விளையாடுவான், மகளிரை தன் வயப்படுத்தும் மாயவன், அவன் கீதை சொல்லி என்னை இன்புறச் செய்வான் என்று கண்ணனாகியத் தோழனைப் பாராட்டுகிறார் (Bharathiyar, 2011). இப்பாடலில் பாரதி தன்னை அருச்சுனனாகவும் கண்ணனைத் தோழனாகவும் எண்ணி பாடியுள்ளதை அறியமுடிகிறது.

## கண்ணன் என் தாய்

பாரதி கண்ணன் என் தாய் என்ற கவிதையில் இயற்கையைத் தாயாகப் பாவிக்கிறார். "தாய் தந்தை இவ்விரு கற்பனைகளும் பாரதியிடம் அத்தனை வெற்றி பெறவில்லையெனவே விளம்ப வேண்டும்" என்கிறார் மு. கோவிந்தசாமி. வானத்தைக் கையாகவும், மண்ணை மடியாகவும் கொண்டு தாயை இயற்கை அன்னையாக, கடவுளாக உருவகப்படுத்துகிறார் (Govindasamy, 1963). சந்திரன், மேகம், சூரியன், வானமீன்கள், மலைகள், நதிகள், கடல், காவினங்கள், மலர்கள், கனிகள் ஆகிய கோடிக்கணக்கான பொம்மைகளைக் காட்டுகிறாள். வாழ்வை இனிமையாக்க பண்டங்கள், பாட்டுகள், தோழர் இவைகளைச் சூழச் செய்கிறாள். பாரதியாகிய குழந்தைக்குப் பறவைகள், விலங்குகள், சுறாக்கள், மீன்வகைகள் ஆகிய தோழர்களைத் தருகிறாள்.

"சோலைகள் காவினங்கள் - அங்கு

சூழ்தரும் பலநிற மணிமலர்கள்

கோலமுஞ் சுவையுமுற - அவள்

கோடிபல் கோடிகள் குவித்து வைத்தாள்"

இப்பாடலில் சக்தி வழிபாடு மேலோங்கி உள்ளதைக் காணமுடிகிறது (Bharathiyar, 2011).

## கண்ணன் என் தந்தை

தந்தை என்றாலே நல்வழிகாட்டுபவர், பெருமை, குலத்தைக் காப்பவர் என்பதாகும். எனவே தான் புறநானூறு சான்றோனாக்கல் தந்தைக்குக் கடனே என்கிறது. கண்ணன் பக்தரைச் சோதிக்கும் முறை பற்றி,

"நல்வழி செல்லுபவரை - மனம்

நையும்வரை சோதனைசெய் நடத்தையுண்டு"

என்று பாடுகிறார் (Bharathiyar, 2011). இக்கண்ணன் தான் கடவுள் என்பதினை,

"ஈசனென்றும் கண்ணனென்றும் சொல்லுவதுண்டு

மூவகைப் பெயர் புனைந்தே - அவன்

முகமறி யாதவர் சண்டைகள் செய்வார்

தேவர் குலத்தவன் என்றே - அவன்

செய்திதெரி யாதவர் சிலருரைப்பார்"

என்று கூறி இக்கடவுளாகிய கண்ணனே என் தந்தை என்கிறார் (Bharathiyar, 2011). வாழ்வைச் செம்மைப்படுத்தும் இயல்புடையது வேதமே தவிர, வேதம் என்ற நூல் வேதம் ஆகாது என்பதை,

“போலிச் சுவடியை எல்லாம் - இன்று

பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மையுண்டென்பான்”

என்று கூறுகிறார் (Bharathiyar, 2011). தமது சொந்த வாழ்வில் சாதிய வேறுபாடுகளை உதறித் தள்ளியவர் பாரதி. வேள்வி முறைகளைத் தடுத்த புரட்சிக் கண்ணனைப் பாரதியார் பாராட்டுகிறார். இக்கருத்திற்கு சா. ராஜீ “பாரதியின் தந்தை சற்றுப் புரட்சிக்கார நாத்திகனைப் போலத் தோன்றுகிறார்” என்று கூறுகிறார் (Raju, 1960). பாரதியின் தந்தை கண்ணன் புரட்சியாளராகவே காட்சியளிக்கிறார்.

## கண்ணன் என் சேவகன்

பாரதி ஓர் இடத்தில் கண்ணனைக் கடவுளாகவும் மற்றொரு இடத்தில் தனக்குச் சேவகனாகவும் காண்கிறார். தெய்வத்திற்குச் சேவகம் செய்வதே மனிதப் பிறவியின் பெரும் பேறாகக் கருதப்பட்ட நிலையில் பாரதி கண்ணனை தனக்குச் சேவகனாகப் பாவிக்கிறார்,

“சேவகராற் பட்ட சிரமமிக உண்டு, கண்டீர்

சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை”

சேவகர் இல்லாவிட்டால் ஏற்படும் துன்பத்தினைச் சொல்லி பின்,

“ஒன்றுமில்லை கண்ணனென்பர் ஊரிலுள்ளோர் என்னை”

என்று கண்ணன் தன்னை மிக எளிமையாகத் தன்னை அறிமுகப்படுத்துவதாக அமைக்கிறார் (Bharathiyar, 2011). சேவகனான கண்ணிடம் கூலியென்ன என்று கேட்க,

“ஐயனே!

தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை

நானோர் தனியாள், நரைதிரை தோன்றா விடினும்

ஆன வயதிற் களவில்லை, தேவரீர்

ஆதரித்தாற் போதும் அடியேனை, நெஞ்சிலுள்ள

காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்றான்

பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றனவே

கண்டு, மிகவும் களிப்புடனே நானவனை

ஆளாகக் கொண்டுவிட்டேன்”

என்று சேவகனாகிய கண்ணன் கூறுகிறார் (Bharathiyar, 2011). நல்ல ஏமாளி தனக்குச் சேவகனாகக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்த பாரதி நாட்கள் செல்லும் நிலையில் கண்ணன் பாரதியிடையேயான படிப்படியாக உறவு நிலை வளர்ந்ததை,

“நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்

பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன் கண்ணனால்

பெற்றுவரு நன்மை எல்லாம் பேசி முடியாது

வீதி பெருக்குகிறான் வீடுசுத்தம் ஆக்குகிறான்

தாதியர் செய் குற்றம் எல்லாம் தட்டி அடக்குகிறான்

நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்

எங்கிருந்தோ வந்தான், இடைசாதி என்று சொன்னான்

இங்கிவனை யான்பெற என்னதவம் செய்து விட்டேன்

கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன் கண்கொண்டேன்!

கண்ணனெனை ஆட்கொள்ள காரணம் உள்ளனவே"

என்று குறிப்பிடும் கவிதை வரிகள் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகின்றன (Bharathiyar, 2011). பார்வைக்குச் சேவகராய் இருப்பவர் கூட பண்பிலே உயர்ந்தவராய் இருக்கக்கூடும் என்பதை பாரதி கண்ணன் என் சேவகன் வழி எடுத்துகாட்டுகிறார். "கண்ணனை நான் ஆட்கொண்டேன்" என்ற வரி பாரதியும் சேவகனான கண்ணனும் ஒன்றாகக் கலந்துவிட்டனர் என்பதில் உச்சநிலையாக அமைந்துள்ளது.

## கண்ணன் என் அரசன்

இப்பகுதியில் பாகவதத்தில் கண்ணன் கம்சனை வென்ற கதையைப் பாடுகிறார். கண்ணன் பிறந்தது முதல் கம்சனால் கொல்ல முயற்சிக்கப்படுகிறான். பிறப்பு முதலே கண்ணன் பல போராட்டங்களுக்கிடையே ஆயர்பாடியில் வளர்கிறான். கம்சனோ எதிர்ப்பார் யாருமின்றி துவாரகையை ஆளுகிறான். இதைக் கண்ட பாரதி கம்சனைச் சுகமாக வாழவிட்டுவிட்டு ஏன் பல ஆண்டுகளாக அடிமையாகவே வாழ்கிறான் கண்ணன் என்று ஐயம் கொள்கிறார். மேலும்,

"இடையன் வீருமில்லாதவன் அஞ்சினோன்

என்றவர் சொலும் ஏச்சிற்கு நாணிலான்

கொல்லப் பூத மனுப்பிடு மாமனே

கோலுயர்த்துல காண்டு களித்திட

முல்லை மென்னகை மாதர்க்கும் பாட்டிற்கும்

மோக முற்றுப் பொழுதுகள் போக்குவான்"

என்ற பாடல் வரிகள் வழி, கண்ணன் பொறுப்பற்று பொழுதைக் களிக்கிறான் என்று கண்ணன் மீது குறைபட்டுக் கொள்கிறார். பின் அவன் கம்சனை வென்றவுடன் பெருமிதம் கொள்கிறார் (Bharathiyar, 2011).

"காலம் வந்துகை கூடுமப் போதிலோர்

கணத்திலே புதிதாக விளங்குவான்

சக்கரத்தை யெடுப்ப தொருகணம்

தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்

இக்கணத்தில் இடைக்கணம் என்றுண்டோ?

இதனுள்ளே பகை மாய்ந்திட வல்லன்காண்!

கண்ணன் எங்கள் அரசன் புகழினைக்

கவிதை கொண்டெந்தக்காலமும் போற்றுவேன்"

என்று அரசனாகிய கண்ணனைப் புகழ்கிறார். கண்ணன் பாடல்கள் அனைத்திலும் தன்னையும் இணைத்துக் கொள்கிறார் (Bharathiyar, 2011).

"தேசம் போற்றத்தன் மந்திரி ஆக்கினான்

நித்தச் சோறினுக் கேவல் செய வந்தேன்!

நிகரிலாப் பெருஞ் செல்வம் உதவினான்

வித்தை நன்கு கல்லாதவன் என்னுளே

வேத நுட்பம் விளங்கிடச் செய்திட்டான்

கண்ணன் எம் பெருமானருள் வாழ்கவே!"

என்பதன் வழி அரசனாகிய கண்ணன் தன்னை மந்திரியாக்கியதோடு, பெருஞ்செல்வத்தைக் கொடுத்தான், வேதநுட்பங்களைக் கற்றுக் கொடுத்தான் என்று கூறி அவன் புகழ் வாழ்க என்று பாடுகிறார். கண்ணை அநீதியை அகற்றி நல்லாட்சி புரியும் மன்னனாகக் உருவகப்படுத்துகிறார் (Bharathiyar, 2011).

## கண்ணன் என் சீடன்

முருகன் தன் தந்தையாகிய சிவபெருமானுக்குப் பாடம் கற்பித்து குருவாகிறான். அதுபோல பாரதியின் கண்ணன் என் சீடன் எனும் பகுதியில் சீடன் சில பாடல்களை ஆசிரியருக்குக் கற்றுக் கொடுக்கிறான். பெரும்பாலான ஆசிரியர்கள் தனக்கு எல்லாம் தெரியும் என்ற ஆணவம் கொண்டவர்களாகவும் மாணவர்கள் தன் கட்டளைக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற கருத்துடையவர்களாகவுமே இருப்பர். இக்கருத்தினை உடைப்பதாக இப்பகுதி அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் உலகில் அறியாத செய்திகள் ஆயிரம் ஆயிரம் உண்டு என்பதை சீடன் ஆசிரியருக்கு அறிவுறுத்துகிறான். குரு தன் மாணவனை தன் கட்டுக்குள் கொண்டுவர பலவகையில் முயற்சித்தும் தோற்றுப் போகும் நிலையில் சீடனிடன் "தோற்று விட்டேனடா!" என்று உண்மையை உணர்ந்து கூறுகிறார். இந்நிலையில் சீடனாகிய கண்ணன் பணிந்து சிலமொழிகள் பேசி மறைகிறான். ஆசிரியனின் அகந்தையை அழித்த சீடன் அவர் மனதில் நிலைத்து விடுகிறான். சீடனாகிய கண்ணன் பாரதியின் உள்ளிருந்து,

"மகனே ஒன்றை யாக்குதல் மாற்றுதல்

அழித்திட எல்லாம் நின்செயலன்றுகாண்

தோற்றேன் என நீ உரைத்திடும் பொழுதிலே

வென்றாய் உலகினில் வேண்டிய தொழிலெலாம்

ஆசையுந் தாபமும் அகற்றியே புரிந்து

வாழ்க நீ"

என்று கீதையின் உபதேசங்களை எடுத்துச் சொல்கிறான் (Bharathiyar, 2011). பாரதி ஒரு நல்ல சீடனிடம் கண்ணனைக் காணலாம் என்பதாகப் பாடலை அமைத்திருக்கிறார்.

## கண்ணன் என் சற்குரு

குரு என்பவன் அனைத்தையும் துறந்து எப்பொழுதும் ஞானியாக தத்துவங்களை உரைப்பவராக இருக்க வேண்டும் என்பதே குருவிற்கான அடையாளமாக அமைந்துள்ளது. இக்கருத்தினை மாற்றுவதாக கண்ணன் எனது சற்குரு எனும் கவிதைப் பகுதி அமைந்துள்ளது. அறிவு வேட்கையுள்ள சீடன் ஒருவன் குருவைத் தேடி அலைகிறான். அப்பொழுது நாடெங்கும் திரியும் முனிவர் ஒருவர் "வடமா மதுரைப் பகுதியை ஆள்கிறான் கண்ணன்" என்று அச்சீடனை வழிநடத்துகிறார். சீடன் அங்கு சென்று பார்க்கும் பொழுது கண்ணனாகிற அரசன் ஏதோ ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆடலும், பாடலுமாக மகிழ்ந்திருக்கக் காண்கிறான். நாடுகாக்கும் கவலையில் மூழ்கியவனாக உள்ள இவன் எவ்வாறு ஞானியாக முடியும் என்று சீடன் நினைக்கிறான். ஒருநாள் கண்ணன் அவனை அழைத்து "பரஞானம்" உரைக்கிறான். இயற்கையை வியத்தல், சாத்திரத்தை இகழ்தல், ஞானியரின் இயல்புரைத்தல் ஆகிய கருத்துக்கள் சற்குருவாகிய கண்ணன் உரையில் இடம்பெறுகின்றன. கண்ணன் கூறும் ஞானி காடு மலைகளில் திரிந்து துறவு மேற்கொள்பவன் இல்லை. நெஞ்சில் கவலை

இல்லாதவனாக கலைகளில் ஈடுபட்டென்றும் நடப்பவனாக இருப்பான் என்று கண்ணன் விளக்கி சீடனின் ஐயத்தைப் போக்குகிறான்.

அறிவில் சோதியுடையவனாக, நீதிமுறை வழுவாதவனாக, பிறரின் துயர் துடைப்பவனாக, பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவான் என்றும் மேலும் நகரச் சூழலில் மக்கள் மத்தியில் பொறுப்புக்கள் மிகுந்த அரச பதவியில் இருந்து கொண்டும் நல்லவனாக வாழ்ந்தால் அவனே ஞானி என உணர்கிறான் சீடன்,

"ஞானியர் தம்மியல் கூறினேன் - அந்த

ஞானம் விரைவினில் எய்துவாய்"

என்று கூறிய நிலையில் மாணவன் உண்மை நிலை உணர்ந்து மகிழ்கிறான் (Bharathiyar, 2011). இங்கு பாரதி குறிக்கோள் மனிதனாகிய பாரதக் கண்ணனின் இயல்புரைக்கிறார். துறவு என்பது வாழ்வை வெறுப்பது அல்ல, வாழ்வையும், மனிதகுலத்தை நேசிப்பது என்ற கருத்தை வலுப்படுத்துகிறார். பாரதி, அரசர்களுள் பலர் ஞானிகளாகவும் இருந்ததுண்டு என்பதற்கு ஓர் அடையாளமாய் கண்ணனைப் படைக்கிறார்.

## கண்ணம்மா என் குழந்தை

பாரதி குழந்தைகளைப் பெரிதும் விரும்பியவர். பாரதி குழந்தைகளை ராஜா வென்றே கூப்பிடுவார் என்கிறார் அனந்தாச்சாரி. "சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா" என்ற பாடல் குழந்தையை விரும்பும் யாவருக்கும் உலகமெங்கும் பொருந்தும் இயல்புடையதாக பாரதி பாடியுள்ளார். இப்பாடலில் "கண்ணம்மா" என்ற பெயரைத் தவிர கண்ணன் பற்றிய செய்தி எதுவும் இடம்பெறவில்லை. இப்பாடலில் பாரதி சக்தியைக் குழந்தையாகப் பாவித்து பாடியுள்ளார். குழந்தையின் ஒவ்வொரு செயலிலும் தாயின் மனம் ஈடுபடுகிறது என்பதை,

"பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா!

பேசும்பொற் சித்திரமே!

அள்ளியணைத்திடவே - என் முன்னே

ஆடிவரும் தேனே!"

என்று பாடுகிறார் (Bharathiyar, 2011). குழந்தையின் செயலைக் காணும் போது உள்ளம் குளிர்கிறது, கருவம் ஓங்குகிறது, கள்வெறி கொள்கிறது, கண்ணம்மாவின் கண்ணில் நீர் வழிந்தால் தாயாகிய பாரதி மனதில் உதிரம் கொட்டுகிறது.

இக்கவிதையில் பாரதி உணர்ச்சித் துடிப்புடைய சொல்லாடல்களைப் பயன்படுத்துகிறார். பேசும்பொற் சித்திரமே! ஆடிவருந்தேனே! உள்ளம் குளிருதடீ! ஆவி தழுவுதடீ! மேனி சிலிர்க்குதடீ! கள்வெறி கொள்ளுதடீ! உன்மத்தமாகுதடீ! உதிரங் கொட்டுதடீ! போன்ற சொற்கள் உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

## கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை

கோகுலத்தில் வாழ்ந்த கண்ணனின் விளையாட்டுக்களையே இப்பகுதியில் பாரதி பாடுகிறார். பாரதியின் மனம் குழந்தைகளின் விளையாட்டில் கரைந்து விடுகிறது. "தீராத விளையாட்டுப் பிள்ளை" என்று தொடங்கும் இப்பாடலில் கண்ணனின் லீலைகள் இடம்பெற்றுள்ளன. கண்ணன் புல்லாங்குழல் கொண்டு வருவான், நல்ல கீதம் பாடுவான், கோள் சொல்லுவதில் வல்லவன், பழி சொல்லுபவன், யாவருக்கும் நல்லவன் போலேவே நடப்பான், பெண்களைக் கேலிசெய்வான் என்பவை கண்ணனை நினைவூட்டுகின்றன. இப்பாடலில் உள்ள குழந்தையின் செயல்கள் யாவும் எந்நாட்டில் உள்ள குழந்தைக்கும் பொருத்தம் உடையதே.

## கண்ணன் என் காதலன்

பாரதியார் ஆழ்வார் மரபில் இருந்து நாயக நாயகி பாவத்தில் கண்ணன் பாடல்களைப் பாடுகின்றார். பாரதியின் காதல் தொடர்பான பாடல்கள் இலக்கியச் சிறப்பு மிகுந்தவை. பாரதி தன்னை நாயகியாகவும் கண்ணனை நாயகனாகவும் பாவித்துப் பாடுகிறார். கண்ணனைக் காதலனாகப் பாவித்து பாரதி பாடும் பாடல்கள் ஆறு. இக்காதல் பாடல்கள் சங்கப்பாடல்களைப் போல் எல்லோருக்கும் பொருத்தம் உடையதே. இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு சங்கப்பாடல்களில் தனிமனிதர்களின் பெயர் இடம்பெறுவதில்லை, இப்பாடலில் கண்ணன் என்ற பெயர் இடம்பெற்றுள்ளதே தவிர கண்ணனை எண்ணி பிரிவாற்றாமை நிலையில் ஏங்கும் பாடல்கள் இவை,

“தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே

சுடர் விளக்கினைப் போல்

நீண்ட பொழுதாக - எனது

நெஞ்சத் துடித்ததடீ!”

என்று தோழியிடம் புலம்புகிறாள் தலைவி (Bharathiyar, 2011). இயல்பாக நடைமுறைகளைக் கூட வெறுக்கிறாள் தலைவி என்பதை,

“பாலுங் கசந்ததடீ - சகியே

படுக்கை நொந்ததடீ

கோலக்கிளி மொழியும் - செவியில்

குத்தலெடுத்ததடீ”

என்று பாடுகிறார் (Bharathiyar, 2011). கனவினில் கண்ணனைக் கண்டால்,

“மகிழ்ச்சி கண்டதடீ

உச்சி குளிர்ந்ததடீ

இன்பம் விளைந்ததடீ

அழகு வெந்ததடீ

சாந்தி வந்ததடீ”

என்று காதலியின் மனம் மகிழ்வடைகிறது (Bharathiyar, 2011). பாரதியாகிய காதலியும், காதலன் கண்ணனை நினைத்து மனம் வருந்திச் சோர்ந்திருக்கும் வேளையில் தோழியரின் ஆரவாரம் தலைவிக்கு எரிச்சலைத் தருகிறது.

“சலிப்புத் தருகுதடி சகிப் பெண்களே!”

என்று குறிப்பிடுகிறார் (Bharathiyar, 2011). அதோடு காதல் வயப்பட்டவர்களுக்கு எதிலும் நாட்டம் செல்லாது என்பதற்கேற்ப,

“சத்தமிடும் குழல்கள், வீணைகளெல்லாம்

தாளங்களோடு கட்டி மூடி”

வைக்கும்படி ஆணையிடுகிறாள் (Bharathiyar, 2011). தனது அன்புக்கு இணையான அன்பு கிடைக்காத சூழலில் அவனைப் பழிவாங்கும் உணர்வும் கூட ஏற்படுகிறது,

“ஆற்றங்கரைதனில் முன்னமொருநாள் - எனை

அழைத்துத் தனியிடத்தில் பேசியதெல்லாம்

தூற்றி நகர் முரசு சாற்றுவன் என்றே

சொல்லி வருவாயடி தங்கமே தங்கம்”

என்று ஊர் முழுவதும் அவன் செயலைப் பறைசாற்றுவேன் என்று சினக்கிறாள் (Bharathiyar, 2011). ஆயினும் இந்தக் கடுஞ்சினம் கூட அவன் குழலிசையைக் கேட்டவுடன் மாறிவிடுமே என்ற அளவில் அவள் உள்ளம் மறுக்கிறது.

“நேரம் முழுவதிலும் அப்பாவி தன்னையே - உள்ளம்

நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்”

என அவளை நினைத்துருகும் தன் நெஞ்சைத் தானே கடிந்து கொள்கிறாள் (Bharathiyar, 2011). பாரதி காதலனைப் பிரிந்திருக்கும் காதலியின் பல்வேறு மனநிலையைத் தனது பாடலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். கடவுளாகிய காதலனை எண்ணி மானுடப் பெண்கள் காதல் கொள்வதாக அமைந்த இப்பாடல்கள் படிப்போரை ஈர்க்கும் ஆற்றல் கொண்டவை.

## கண்ணம்மா என் காதலி

ஆழ்வார்கள் தன்னைக் காதலியாகவும் கடவுளைக் காதலனாகவும் எண்ணி பாசுரங்களை இயற்றியுள்ளனர். இம்மரபில் இருந்து பாரதி மாறுபட்டு தன்னைக் காதலனாகவும் கண்ணனைக் காதலியாகவும் நினைத்துப் பாடுகிறார். இது காதலி துறையில் ஒரு துணிகர சோதனை என்றே சொல்லலாம். “சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா” எனத் தொடங்கும் கவிதை ஒரு காதலன் தன் காதலியை உணர்வு மேலிடப் பாடுவதாக அமைந்துள்ளது.

“சுட்டும்விழிச் சுடர்தான் கண்ணம்மா

சூரிய சந்திரரோ?

வட்டக் கரியவிழி கண்ணம்மா!

வானக் கருமைக் கொல்லலோ!”

என்று தன் காதலியான கண்ணம்மாவின் அழகினை வியக்கிறார். காண்பதெல்லாம் காதலனுக்குத் தன் காதலியாகவே தோன்றுகிறது (Bharathiyar, 2011).

“நெரிந்த திரைகடலில் நின்முகங் கண்டேன்

நீல விசும்பினிடை நின் முகம் கண்டேன்

திரிந்த நுரையினிடை நின்முகம் கண்டேன்

சின்னக் குமிழிகளில் நின்முகம் கண்டேன்

பிரிந்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே

பெற்றதும் முகமன்றிப் பிறிதொன்றில்லை

சிரித்த ஒலியானிலும் கைவிலக்கியே

திருமித் தழுவியதில் நின்முகம் கண்டேன்”

காதலியின் நாணத்தைப் பாடும் போது கவித்துவம் சுடர்விடுகிறது (Bharathiyar, 2011). காதலன் கொள்ளும் தனிமையின் கொடுமையினை,

“தீர்த்தக் கரையினிலே தெற்கு மூலையில்

செண்பகத் தோட்டத்தில்

பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவிலே

பாங்கியோடு என்று சொன்னாய்

வார்த்தை தவறிவிட்டாய் - அடிகண்ணம்மா!

மார்பு துடிக்குதடீ!"

காதலன் காதலியின் அந்தரங்கமான ஆன்மீகத்தை இனிமையான பாடலாக்குகிறார்,

"பாயுமொளி நீ எனக்கு பார்க்கும் விழி நானுனக்கு

தேயுமது நீ எனக்கு தும்பியடி நானுனக்கு

வாயுரைக்க வருகுதில்லை, வாழிநின்றன் மேன்மையெல்லாம்

தூயசுடர் வானொளியே, சூறையமுதே! கண்ணனம்மா"

என்று படிப்போரை இன்பத்தில் ஆழ்த்தி விடுகிறார் (Bharathiyar, 2011).

## முடிவுரை

பாரதி தன் குறிக்கோள் மனிதனான கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் காண்கிறார். அதற்கேற்ற உறவாகத் தன்னையும் மாற்றிக் கொள்கிறார். கண்ணன் என் தோழன், கண்ணன் என் தந்தை, கண்ணன் என் அரசன், கண்ணன் என் சீடன், கண்ணன் என் சற்குரு. கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை ஆகிய பாடல்களே சமயக் கண்ணனைப் பற்றி மிகுதியும் பேசுகின்றன. கண்ணன் என் தாய் மற்றும் கண்ணன் என் சேவகன் இவ்விரு கவிதைகளிலும் பழங்கதைக் கண்ணனைப் பற்றிய செய்திகள் இல்லை என்றாலும் அவனுடைய கடவுள் தன்மை இப்பாடல்களில் வெளிப்படுகிறது. கண்ணம்மா என் குழந்தை முழுமையான குழந்தைப்பாடலாக அமைந்துள்ளது. கண்ணம்மா என் குலதெய்வம் ஒரு முழுமையான பக்திப் பாடல். கண்ணம்மா என் காதலன் மற்றும் கண்ணம்மா என் காதலி இரண்டுமே சில புராணச் செய்திகளைக் கொண்டுள்ளது. தனிமனிதனின் உறவுகள் அனைத்திலுமே கண்ணன் இயல்புகள் இருத்தல் வேண்டும் என்று ஆசைப்படுகிறார். பாரதி கண்ணனை நாயகியாகக் கொண்டு பாடி இருப்பது புதுமை. இறைவனைச் சேவகனாக, சீடனாகப் பாடுவது என்பது தமது மரபில் இருந்து மாறுபட்ட ஒன்றாகவும் உள்ளது. பாரதியைப் பொறுத்தவரை தெய்வ பக்தியும் மனிதப்பற்றும் ஒன்று என்ற கருத்தே வலுப்பெற்றுள்ளது.

## References

Bharathiyar, (2011) Bharathiyar Kavidhaigal, Aruna Pathippagam, Chennai, India.

Govindasamy, M., (1963) Kavithiran, Paari Nilaiyam, Chennai, India.

Raju, T.S., (1960) Bharathi Vali, Amutha Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License